**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20210223

**பாடசாலைகளை இணைப்பதற்கான மெய்நிகர் தளத்தை திறந்துவைக்கும் அமெரிக்க தூதுவர்**

**வவுனியா, பெப்ரவரி 23:** வேறுபட்ட பிராந்தியங்களில் இருந்தான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இணைக்கும் மற்றும் COVID-19 கட்டுப்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வி தொடர்பான சவால்களுக்கு பதிலளிக்கும் அமெரிக்க நிதியுதவியிலான இணையவழி கல்வி தளமொன்றை (online education platform) இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் இன்று திறந்து வைத்தார். இந்த "ஸ்மார்ட் வகுப்பறைகள்" சிங்களம் மற்றும் தமிழ் பேசுபவர்களை இணைப்பதுடன், தூரப் பிரதேச பாடசாலைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான அணுகலை வழங்குகிறது.

"இந்த ஸ்மார்ட் வகுப்பறைகளானது புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான கல்விக்கான பிள்ளைகளின் அணுகலுக்கு நேரடியாக உதவுகிறது," என்று அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்தார். "இது அவர்களுக்கு புதிய உலகமொன்றை திறந்து வைப்பதுடன், ஒருவருக்கொருவருடனும் அவர்களது சமூகங்களுடனும் உறுதியான தொடர்புகளை கட்டியெழுப்பி சிங்கள மற்றும் தமிழ் மாணவர்களிடையேயான இணைப்பையும் மேம்படுத்துகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்மார்ட் வகுப்பறைக்கான முன்னோடி திட்டத்துக்கு வவுனியாவில் பாடசாலையொன்றையும் திருகோணமலையில் ஒன்றையும் அடையாளம் காண்பதற்கு மாகாண மற்றும் மாவட்ட அதிகாரிகளுடன் நெருங்கி செயற்பட்ட முன்னெடுப்பொன்றுக்கு அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பு (USAID) உதவியளித்தது. இந்த அதிநவீன வகுப்பறைகளானது USAID ஊடாக அமெரிக்கா மக்களிடமிருந்து வழங்கப்பட்ட டிஜிட்டல் காட்சியமைப்புகள், ஒலி உபகரணங்கள், மேசைகள், மற்றும் கதிரைகள் உள்ளிட்டவற்றை கொண்டுள்ளன. தொற்றுநோய் பரவலொன்றின் போது கல்வி இலக்குகளை அடைவதற்கான சவால்களை சமாளிக்க வசதியற்ற பாடசாலைகளுக்கு இந்த 20,000 அமெரிக்க டொலர் முன்னோடித் திட்டம் உதவுகிறது. தமது சமூகங்களில் நீடித்த அமைதிக்கு உதவக்கூடிய வகையில், வேறுபட்ட பிராந்தியங்களில் இருந்தான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களையும் இது இணைக்கிறது.

தற்சார்பு, ஸ்திரத்தன்மையை பலப்படுத்தல், மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு உதவுவதற்கான அமெரிக்க மற்றும் இலங்கை மக்களுக்கு இடையிலான நீண்டகால பங்காண்மையின் அங்கமொன்றாக இந்த ஸ்மார்ட் வகுப்பறை செயற்பாடு காணப்படுகிறது. 1956 ஆம் ஆண்டில் இருந்து மொத்தமாக 350 பில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிகமான இலங்கையிலான USAID இன் திட்டமானது ஆரோக்கியமான, படித்த, மற்றும் தொழில்வாய்ப்புடைய சனத்தொகையொன்றை ஊக்குவிக்கிறது. USAID இன் பணி தொடர்பாக மேலும் தெரிந்துக் கொள்ள பின்வரும் இணையத்தள முகவரிக்கு பிரவேசிக்கவும்: usaid.gov/sri-lanka.